செய்தி வெளியீடு எண்: 403 நாள்: 05.07.2019

## செய்தி வெளியீடு

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, பிரிவு 77–ல் செய்யப்பட்ட வழிவகைகளின்படி, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்யும்போது, விமானம் உள்ளிட்ட போக்குவரத்து செலவுகள் கட்சியின் வேட்பாளர் மற்றும் முகவர்கள் கணக்கில் சேராது. இந்த சலுகையைப் பெற, பிரச்சாரம் செய்யும் தலைவர்களின் பெயர் பட்டியலை தேர்தல் ஆணையத்திடம் அளிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 40 பேரின் பெயர் பட்டியலையும், அங்கீகாரமற்ற அரசியல் கட்சிகள் 20 பேரின் பெயர் பட்டியலையும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்ப வேண்டும். தேர்தல் செலவினத்தில் இருந்து விலக்கு பெறவேண்டிய இந்தத் தலைவர்கள் பட்டியலை, மேற்கண்ட சட்டப்பிரிவின் விளக்கம் 2–ன் உட்பிரிவு 1–ன்படி, தேர்தல் அறிவிக்கை வெளியிட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். 8. வேலூர் நாடளுமன்ற தொகுதிக்கான தேர்தல் அறிவிக்கை 11.07.2019 அன்று வெளியிடப்படவுள்ளது. செலவுத் தொகையிலிருந்து விலக்கு பெற விரும்பும் கட்சிகள் தங்கள் கட்சியின் சார்பில் பிரச்சாரம் செய்யும் தலைவர்களின் பெயர்ப் பட்டியலைத் தெரிவித்து இந்தியத் தேர்தல் ஆணையம் அல்லது தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு 18.07.2019–க்குள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த பட்டியலில் உள்ளவர்களின் பயணச் செலவுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படும். இதுதவிர மற்ற செலவினங்கள் அனைத்தும் வேட்பாளரின் செலவு கணக்கில் சேர்க்கப்படும். அதே நேரம், வேட்பாளருக்கு வேறு கட்சியின் நட்சத்திரத் தலைவர் பிரச்சாரம் செய்தால், அதில் விலக்கு கோர இயலாது.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9